**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.117** **நாள்: 06.05.2022**

**ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட கண்ணன் காலனி மயான பூமியில் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால், பொதுமக்கள் பாலகிருஷ்ணாபுரம் மயான பூமியை பயன்படுத்திக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு**

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலம், கோட்டம்-162, கண்ணன் காலனி மயான பூமியின் எரிவாயு தகன மேடையினை திரவ பெட்ரோலிய தகன மேடையாக மாற்றம் செய்திடவும், மேலும் அங்கு பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதாலும் 09.05.2022 முதல் 08.07.2022 வரை இரண்டு மாத காலங்கள் மேற்கண்ட மயானபூமி இயங்காது.

எனவே, மேற்கண்ட பராமரிப்பு பணிகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் அருகிலுள்ள வார்டு-163க்குட்பட்ட பாலகிருஷ்ணாபுரம் மயான பூமியினை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**